# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலம் ஆறாம் ஞாயிறு | 10 மே 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*




தம்மை அன்பு செய்து தம்முடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்கள், தம்முடைய உடனிருப்பையும் தந்தையின் உடனிருப்பையும் அனுபவிப்பார்கள் என்று இயேசு வாக்குறுதி அளிக்கிறார். இயேசு தம் சீடர்களிடம், "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்" என்று உறுதியளிக்கிறார். இயேசு இனி அவர்களுடன் உடல்ரீதியாக இருக்கப்போவதில்லை என்றாலும், அவர்கள் தங்களின் நம்பிக்கையோடு போராட தனித்துவிடப்பட மாட்டார்கள். அவர்களுடன் தங்கி அவர்களை வழிநடத்த தூய ஆவியாரை தந்தை அவர்களுக்கு அனுப்புவார்.

இயேசு சீடர்களுக்கு அளித்த அதே வாக்குறுதி இன்று நமக்கும் பொருந்தும். தூய ஆவியாரின் கொடைகளின் மூலம் கடவுள் தம் மக்களிடையே தொடர்ந்து தங்கியிருந்து, ஒவ்வொரு தலைமுறையிலும் நம்மை வழிநடத்தி, வலுவூட்டி ஆறுதல்படுத்துகிறார்.

அன்பான மற்றும் ஆதரவான குடும்பங்களால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஒரு குழுவில் இணைந்திருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை அனுபவிக்கிறார்கள். அக்கறையுள்ள ஒரு குடும்பம், ஒரு தனிநபர் தன்னம்பிக்கையில் வளரவும் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளவும், வாழ்க்கையின் சவால்களை துணிவுடன் எதிர்கொள்ளவும் உதவுகிறது. எதிர்பாராதவகையில் எல்லோருக்கும் இதுபோன்ற ஆதரவு கிடைப்பதில்லை. சில முதியோர் தனித்து வாழ்கிறார்கள். சிலர் நோயின் காரணமாக வீட்டிலேயே முடங்கியுள்ளனர். மற்றவர்கள் பலரின் மத்தியில் வாழ்ந்தாலும், தாங்கள் மறக்கப்பட்டுவிட்டதாகவும், கவனிக்கப்படாதவர்களாகவும் உணர்கிறார்கள்.

இங்கே நம்முடைய கிறிஸ்தவ நம்பிக்கை நாம் ஒன்றித்து நடப்பதைப் பயிற்சி செய்ய நம்மை அழைக்கிறது. நமது அதிச - க்களிலும், சுற்றுப்புறங்களிலும், தனித்தோ அல்லது ஒதுக்கப்பட்டோ இருப்பவர்களுக்கு நமது கவனிப்பைத் தர நாம் அழைக்கப்படுகிறோம். வயதுமுதிர்ந்த அண்டை அயலாரைச் சந்திப்பது, வீட்டிலேயே முடங்கியிருப்பவருக்கு பங்கின் செய்தித்தாளையோ அல்லது ஹெரால்ட் பத்திரிகையையோ கொண்டு சேர்ப்பது. அவர்கள் பேசுவதைக் காதுகொடுத்துக் கேட்பது, அல்லது அவர்களின் அன்றாடத் தேவைகளுக்கு உதவுவது போன்ற எளிய செயல்கள், கடவுளின் அன்பின் சக்திவாய்ந்த அடையாளங்களாக மாறக்கூடும். அக்கறை மற்றும் கவனத்தின் இந்தச் சிறிய செயல்களால் பிறர் மறக்கப்படவில்லை அல்லது தனித்துவிடப்படவில்லை என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக தூய ஆவியார் நம் வழியாகச் செயல்படுகிறார்.

தூய ஆவியார் நம்மை அன்பு செய்து, நம்மீது அக்கறை காட்டும் ஒரு உண்மையான நபர். அவர் திருத்தூதர்களை அவர்களின் பணியில் பலப்படுத்தியதுபோலவே, சோதனைக் காலங்களில் நம்மையும் பலப்படுத்துகிறார். நாம் பலவீனமாக உணரும்போது, நம்மை உற்சாகப்படுத்துகிறார். தூய ஆவியார் வழியாக, இயேசு ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொரு தனிப்பட்ட சூழ்நிலைகளிலும் தொடர்ந்து நம்மோடு உடனிருக்கிறார்.

நம்பிக்கை நம்மை ஒருவருக்கொருவர் இணைக்கிறது. நம்பிக்கையின் மூலம், நாம் இனி திக்கற்றவர்கள் அல்ல; மாறாக கிறிஸ்துவில் சகோதர சகோதரிகளாக இருக்கிறோம். ஒரு சமூகத்தில் இணையவேண்டும் என்பது நமது இயல்பான ஏக்கம், கடவுளின் மாட்சிமிக்க குடும்பத்தில் அதன் இறுதி நிறைவைக் காண்கிறது. இவ்வுலகில் நம்பிக்கையாளர்களின் சமூகத்தில் தொடங்கி ஒருநாள் விண்ணகத்தில் நிறைவாக்கப்படும்.

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர்பணிகள் 8: 5-8, 14-17

திருப்பாடல் 66: 1-7, 16, 20

1 பேதுரு 3: 15-18

யோவான் 14: 15-21

> தூய ஆவியார் வழியாக நாம் விண்ணகத்திற்கு மீட்கப்பட்டு, விண்ணக அரசிற்கு மீண்டும் வழிநடத்தப்பட்டு, கடவுளின் சுவீகாரப்பிள்ளைகளாகிறோம்.
>
> – புனித பெரிய பேசில்

INTERNAL CIRCULATION ONLY
BUL 19/2026
வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | Email: api@archkl.org